# வெள்ளகோவில் நகராட்சி
## திருப்பூர் மாவட்டம்
## குடிநீர் துணை விதிகள்

இந்நகராட்சி குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை உயர்வு செய்யப்பட்டதற்கான நகராட்சி நகர் மன்றத் தீர்மானம் எண். 01 / 2015, நாள். 02.02.2015, நகர் மன்றத் தீர்மானம் எண். 27 / 2015, நாள். 27.04.2015–ன்படியும் மற்றும் குடிநீர் இணைப்பு மாதாந்திரக் கட்டணம் உயர்வு செய்ய மன்றத் தீர்மானம் எண். 41 / 2016, நாள். 16.12.2016 மற்றும் மன்றத் தீர்மானம் எண். 52 / 2017, நாள். 17.02.2017–ல் அங்கீகரிக்கப்பட்டு 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 130, 131 (1), (2), (3), 132 (1), 132 (அ), 134, 135, 306 (3) (சி), (டி), (இ), (எப்), (ஜி), (எச்), (ஐ) 308 மற்றும் 309 ஆகிய பிரிவுகளின்படி நகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்புகளை சரியான முறையில் வைத்திருத்தல் ஆகியன இதில் அடங்கும்.

## துணை விதிகள்
## பாகம் – 1

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 131 (1) அல்லது 132 பிரிவின் திருத்தத்தின் படியும் குடிநீர் விநியோகத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி ‘அ’ படிவத்தில் மனுதாரர் அதாவது கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து பதிவுக் கட்டணம் ரூ. 50.00 (ரூபாய் ஐம்பது மட்டும்) செலுத்தி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்திப் பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் தங்கள் செலவில் துவங்கப்பட வேண்டும்.

1. (அ) குடிநீர் இணைப்பிற்கான மொத்த மதிப்பீட்டில் 10 சதவீதம் சென்டேஜ் கட்டணம் ரூ. 250 /–க்கு குறையாமல் ஆய்வுக் கட்டணமாய் வசூலிக்கப்படும்.

(ஆ) அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வேலைகளுக்கு, வேலைகளுக்கான தொகை மற்றும் மேற்படி வேலையை மேற்பார்வை செய்வதற்கான கட்டணம் ஆகியவற்றை முன்பணமாக செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் வேலை முடிவுற்ற ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.

(இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகை தவிர இதர கட்டணங்கள் திருப்பித் தரப்பட மாட்டாது அல்லது செலுத்திய எந்த தொகைக்கும் வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) குழாய் இணைப்பு கோரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இனத்திற்கும் அடியிற்கண்ட வைப்புத் தொகையை செலுத்த வேண்டும்.

வீட்டு உபயோக இணைப்புகள் ரூ. 8000 /– (ரூபாய் எட்டாயிரம்)

தொழிலக இணைப்புகள் ரூ. 16000 /– (ரூபாய் பதினாரயிரம்)

வணிக உபயோக இணைப்புகள் ரூ. 16000 /– (ரூபாய் பதினாரயிரம்)

2. நகராட்சியில் அளவுமானி கட்டண அடிப்படையில் மட்டுமே அனைத்து வீட்டிணைப்புகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படும். வீட்டு உபயோகத்திற்கு மட்டும் தண்ணீர் உபயோகப்படுத்தும் இணைப்புகளுக்கு தண்ணீர் கட்டணம் பிரிவு (3) (ஆ) (1) இல் உள்ளபடி வசூலிக்கப்படும். அந்த கட்டணத்தில் அளிக்கப்படும் தண்ணீர் வீட்டுக்கு உபயோகம் இல்லாத பிற காரியங்களுக்குப்

பயன்படுத்தப்பட்டாலோ அல்லது அவ்வாறு உபயோகப்படுத்துவதற்கு உண்டான வாய்ப்பு இருப்பதாக ஆணையாளர் நம்பும்படியான காரணங்கள் இருந்தாலோ பிரிவு 3 (ஆ) (1) கண்டுள்ளபடி தண்ணீர் கட்டணம் செலுத்துமாறு உத்தரவிடலாம். அவ்வித உத்தரவை ஏற்றுக்கொள்ள மறுத்தால் வீட்டு இணைப்பை துணை விதிகளில் உள்ள பிரிவுகளின்படி உடனடியாக துண்டிக்கப்படும்.

3. (அ) வீட்டு இணைப்பு குழாய்கள் மூலம் அளிக்கப்படும் தண்ணீர் எவ்வித உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. (வீட்டு உபயோக காரியமாக அல்லது பிற காரியமாக) என்பதை மன்றம் முடிவு செய்யும்.

## வீட்டு உபயோகம்

(ஆ) வீட்டு உபயோக காரியங்களுக்கு 10,000 லிட்டர் வரை குறைந்தபட்ச கட்டணம் ரூ. 150 /–, பத்தாயிரம் லிட்டருக்கு மேல் ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் ரூ. 5 /– வீதம் வசூலிக்கப்படும். (அளவுமானி வாடகை, பராமரிப்பு கட்டணம் மற்றும் Water cess நீங்கலாக)

(இ) வீட்டு உபயோக இணைப்பானாலும், இல்லாவிட்டாலும் தண்ணீர் இலவசமாக எடுத்துக் கொள்ள சலுகை அளிக்கப்படமாட்டாது.

## தொழில் உபயோகம்

(ii) வீட்டு உபயோகத்திற்கல்லாத மற்ற காரியங்களுக்கு விநியோகிக்கப்படும் தண்ணீர், தொழிலக உபயோகத்திற்கு 10,000 லிட்டர் வரை குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 250 /–. பத்தாயிரம் லிட்டருக்கு மேல் ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் ரூ. 10.00 /– வீதம் வசூலிக்கப்படும். (அளவுமானி வாடகை, பராமரிப்பு கட்டணம் மற்றும் Water cess நீங்கலாக)

## வியாபார உபயோகம்

(iii) வீட்டு உபயோகத்திற்கு அல்லாத மற்ற காரியங்களுக்கு விநியோகக்கப்படும், வியாபார காரியங்களுக்கு 10,000 லிட்டர் வரை குறைந்த பட்ச கட்டணம் ரூ. 300 /–. பத்தாயிரம் லிட்டருக்கு மேல் ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் ரூ. 10.00 /– வீதம் வசூலிக்கப்படும். (அளவுமானி வாடகை, பராமரிப்பு கட்டணம் மற்றும் Water cess நீங்கலாக)

4. நகராட்சிக்குச் சொந்தமானதும் அதனால் கண்காணிக்கப்படுவதும் அதன் நிர்வாத்திற்கு உட்பட்டதுமான நிறுவனங்களுக்கு அளவுமானி கட்டண முறைப்படி இணைப்புகளின் வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகமில்லாத பிற காரியங்களுக்கோ பயன்படுத்தப்படும் தண்ணீர் உபவிதி 3 இல் உள்ளபடி கட்டணம் வசூலிக்கப்படும். இப்படிப்பட்ட எல்லா இனங்களுக்கும் குறைந்த தேவையான காலத்தில் ஒரு குழாய்க்கு ஒரு நிமிடத்திற்கு 5 லிட்டர் என்ற விகிதத்தில் தண்ணீர் விழும்படி கீழ் திருகு உள்ளகருவி (Ferrules) அல்லது நீர் தடுப்பான் (Flow control valve) இதில் ஏதாவது ஒன்று பொருத்தப்பட்டு வீட்டிணைப்பிற்கு செல்லும் தண்ணீர் கட்டுப்படுத்தப்படும்.

5. தண்ணீர் விநியோகிக்க வேண்டிய ஒவ்வொரு வீட்டிற்கும் பிரதானக் குழாயில் இருந்து (மெயின் குழாய்) நீர்வரத்து கட்டுப்படுத்தும் உபகரணம் (Flow Control Valve) அமைப்புடன் திறந்த மூடக்கூடிய (Stop Cock) ஒரே இணைப்புக்குத்தான் (சர்வீஸ்) கொடுக்கலாம். பக்கத்து வீட்டில் ஏற்கனவே உள்ள குழாய் இணைப்பிலிருந்தோ இனி அமைக்கக்கூடிய குழாய் இணைப்பிலிருந்தோ வேறு எந்த வீட்டிற்கும் தண்ணிர் விநியோகம் செய்யக்கூடாது.

6. (அ) இந்த உபவிதிகளுக்குட்பட்டு பிரதானக் குழாயில் வீட்டிணைப்புக்கு எடுக்கப்படும் இடத்திலுள்ள தண்ணீர் அழுத்தம் பிரதானக் குழாயிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட இருக்கும் இடத்தின் தூரம் இவைகளைப் பொறுத்து வீட்டிணைப்பிற்கான தன்மை குழாயின் விட்டம் திறந்து மூடக்கூடிய சாதனம் (Stop Cock) அல்லது குழாயின் வகை மற்றும் எண்ணிக்கைகள் நிர்வாக அதிகாரியால் நிர்ணயம் செய்யப்படும் குடிநீர் இணைப்புகள் 30 மீட்டருக்கு குறைவாக இருந்தால் 15 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள்மற்றும் மெயினில் 10 எம்.எம். பெருல் பொருத்த வேண்டும். அதற்குமேல் 90 மீட்டர் தூரம் வரையுள்ள தூரத்திற்கு 20 மி.மீ. குழாய்கள்மற்றும் மெயினில் 15 எம்.எம். பெருல் பொருத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு இணைப்பிற்கும் நீர்வரத்து கட்டுப்படுத்தும் உபகரணம் (Flow Control Valve) பொருத்த வேண்டும். அளவுமானி முறைப்படி கட்டணம் வசூலிக்கப்பட்டு வீட்டு இணைப்புக் கொடுக்கப்படும்போது குறைந்தபட்ச தேவையான நேரத்தில் ஒரு இணைப்பிற்கு ஒரு நிமிடத்திற்கு 5 லிட்டர்கள் தண்ணீருக்கு மேல் வராதபடி கீழ்த்திருகு கருவியின் மூலம் கட்டுப்படுத்த வேண்டும். வீடுகளில் வைக்கப்படும் குழாயானது நன்றாக பரிசோதனை செய்யப்பட்ட கீழ்த்திருகு தன்மையுடையதாகவோ அல்லது சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த மாதிரியாகவோ இருக்க வேண்டும். மேலும் குழாயின் அளவு (அரை அங்குலம்) 15 மி.மீட்டருக்கு மேல் இருக்கக்கூடாது.

(ஆ) வீட்டிணைப்பு குழாயின் விட்டம் 20 மி.மீட்டருக்கு மேற்போகும் சமயத்திலோ அல்லது குழாய் இணைப்பின் நீளம் 90 மீட்டருக்கு அதிகமாகும் சமயத்திலோ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறுதல் வேண்டும்.

(இ) வீட்டிணைப்பு குழாய் வைக்கப்படும் இடமானது மேறப்டி திருகு குழாயில் இருந்து வரக்கூடிய தண்ணீரில் மூழ்கியிருக்கும்படியாகவோ அல்லது குழாயில் இருந்து சிந்தும் தண்ணீர் அல்லது கழிவு தண்ணீர் அருகாமையில் உள்ள நகராட்சி வடிகாலில் சேர முடியாதபடியாகவோ இருந்தால் அவ்விடம் அனுமதிக்கப்படக் கூடாது.

(ஈ) நகராட்சி அதிகாரிகள் எளிதில் சென்று பார்வையிட ஏதுவாய் ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுக்கப்பட்ட இணைப்புக் குழாய்கள் மற்றும் இது போன்ற அமைப்பு ஆணையாளரால் குறிப்பிடம் இடத்தில் அமைக்க வேண்டும். அவ்வித இணைப்பு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர் நகராட்சி அதிகாரிகள் வந்து பார்வையிடுவதற்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுத்தால் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும்.

(உ) வீடுகளிலுள்ள நீர்த்தொட்டிகளிலும், கால்நடைகளுக்கென நிரப்பப்பட்ட தொட்டிகளிலும் குழாய்கள் நீரில் அமிழ்வதால் நீர் பின்னோக்கி இழுக்கப்படுவதையும் அதனால் ஏற்படும் அபாயத்தையும் தடுக்க உட்செலுத்தக் குழாய் பந்து வடிக அமைப்பானுடன் இணைக்கப்பட்டிருக்கும் போதிலும் நீர்மட்டம் உட்குழாய்க்கு கீழ் மட்டுமே நிரப்பப்பட வேண்டும்.

(ஊ) சாக்கடை செல்லும் வாய்க்கால் கழிப்பிடம் மற்றும் வேறு இடங்களிலும் குறுக்காக குழாய் கொண்டு செல்வதால் குழாய் சேதம் ஏற்படக் கூடியதாகவோ அல்லது தண்ணீரில் தொத்து வியாதிகள் கலக்கக்கூடியதாவோ உள்ள இடமென்று ஆணையாளரால் கருதினால் அவ்விடங்களில் செல்லும் குழாய் ஒப்புக்கொள்ளும் அளவிற்கு நீளம், விட்டம், கனம் உள்ள இரும்புக் குழாய்கள் வழியாக செல்லும்படி மேற்படி ஆணையாளரால் கூறும் உயரத்தில் பொருத்தப்பட வேண்டும்.

(எ) இணைப்புக் குழாய் மற்றும் இதர அமைப்புகளில் எங்காயிலும் தண்ணீர் ஒழுகினால் அல்லது ஏதாவது குற்றங்குறைகள் இருப்பின் கால தாமதமின்றி உடனே ஆணையாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் கடமையாகும்.

(ஏ) குழாய் இணைப்புகளில் எந்தவிதமான கையிறைப்பானோ, விசை இறைப்பானோ, நேரடியாகவோ, மறைமுகமாவோ பொருந்தக்கூடாது. பயன்படுத்துவது கண்டு பிடிக்கப்பட்டால் எவ்வித அறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

7. (அ) இந்துக் கோயில்கள், முஸ்லீம் மசூதிகள், கிறிஸ்தவ ஆலயங்கள் (சர்ச்) ஆகியவைகளுக்கு விநியோகம் செய்யப்படும் தண்ணீர் குடிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்தப்படும். அதனால் அவைகளுக்கு உபவிதிகள் 3 ஆ (ii) இல் கண்டுள்ளபடி கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஆ) அந்தந்த ஸ்தாபனங்களில் நிர்வாகஸ்தர்கள் குழாய்கள் போடுவதற்கும் அவைகளைப் பராமரிப்பதற்கும் அல்லது அவற்றை எடுக்கவும் ஆகும் எல்லாச் செலவையும் செலுத்த வேண்டும். இவ்விடங்களில் வைக்கப்படும் குழாய்கள் 15 மி.மீ. விட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். தண்ணீர் விணாகாமல் தானே மூடிக் கொள்ளும் வகையினதாகவும் இருக்க வேண்டும். 30 மீட்டருக்கு குறைவாக இருந்தால் 15 மி.மீ. விட்டமுள்ள குழாயும், 90 மீட்டர் வரை இருந்தால் 30 மி.மீ. விட்டமுள்ள குழாயும் பதித்து இணைப்பு கொடுக்கப்படும். குறைந்த பட்சதேவை நேரத்தில் நிமிடத்திற்கு 5 லிட்டர் தண்ணீர் கிடைக்குமாறு தண்ணீர் ஓட்டம் கட்டுப்படுத்தப்படும்.

(இ) விநியோகம் செய்யப்படும் தண்ணீர் வீணாக்கப்படுவதாகவோ முறை தவறிப் பயன்படுத்தப்படுவதாகவோ தெரிய வந்தால் மேற்படி இணைப்பு துண்டிக்கப்படும்.

8. (1) நகராட்சி மன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட அளவுக்கருவி (மீட்டர்கள்) நகராட்சி மன்றம் அல்லது கட்டிடத்து உரிமையாளர் அல்லது குடியிருப்பவரால் வழங்கப்பட வேண்டும். அளவுமானியானது நகராட்சி மன்ற அதிகாரிகள் அல்லது அலுவலர்களால் பூட்டப்பட்டு, முத்திரையிடப்பட்டு இருத்தல் வேண்டும். சாதாரணமாக மாதத்திற்கு ஒருமுறை அளவுக் கருவியில் கணக்கு எடுக்கப்படும்.

(2) அளவுமானி நகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டிருந்தாலும் அல்லது வழங்கப்பட்டாலும் குடியிருப்பவர் அல்லது சொந்தக்காரரிடமிருந்து அளவுமானி வாடகை மற்றும் பராமரிப்புக்காக மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கும் அளவுமானி ஒன்றுக்கு ரூ. 10.00 /— வீதம் வசூலிக்கப்படும். அளவுமானி குடியிருப்பவர் அல்லது சொந்தக்காரரால் வழங்கப்பட்டிருந்தால் மாதம் ஒன்றுக்கு அதன் பகுதிக்கும் பராமரிப்புக் கட்டணமாக ரூ. 5.00 /— (ரூபாய் ஐந்து மட்டும்) வசூலிக்கப்படும்.

(3) கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர்களால் அளவுமானி வழங்கப்பட்டு பொருத்தப்பட்டால் அளவுமானி பழுதாகும்பொழுது ஆணையாளர் உத்தரவு கிடைக்கப்பெற்ற இரண்டு மாதத்திற்குள் ஆணையாளர் மேற்பார்வையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் செலவில் பழுது பார்க்க அல்லது புதுப்பிக்கப்பட வேண்டும். அவ்விதம் பழுது பார்க்கப்படாவிடில் அவ்விணைப்பு துண்டிக்கப்படும். நகராட்சி மன்றத்தால் வழங்கப்படும் அளவுமானி வீட்டு சொந்தக்காரர் மற்றும் ஏனையோரால் உடைக்கவோ, திறக்கவோ அல்லது முறைகேடாகவோ பயன்படுத்தப்படாமல் இருந்து பழுது ஏற்பட்டால் அவை நகராட்சியின் செலவிலேயே பழுது பார்க்கப்படும். அவ்வாறு முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பின் வீட்டு சொந்தக்காரர் அல்லது அனுபவிப்பவர் அவருடைய சொந்த செலவில் புதிய மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அத்துடன் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் நகராட்சியில் செலுத்தப்பட்டிருக்கும் அனைத்துக் காப்புத் தொகைகளும் பறிமுதல் செய்யப்படும்.

(4) மேலே குறிப்பிட்டபடிஅளவுமானி பழுதாகி பழுதுபார்க்கப்படும் காலங்களில் உபவிதி 2 இல் குறிப்பிட்டுள்ளபடி கட்டணம் வசூலிக்கப்படும்.

9. (அ) (1) வழங்கப்படும் தண்ணீருக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை அவ்வாறு செலுத்தும்படி கோரப்பட்ட (டிமாண்டு பிறப்பிக்கப்பட்ட) ஏழு தினங்களுக்குள் நகராட்சி அலுவலகங்களில் செலுத்தி வேண்டும். எந்த மாதத்தில் தண்ணீர் பயன்படுத்தப்பட்டதோ, அந்த மாதத்திற்குரிய கட்டணம்

சாதாரணமாக அடுத்தமாதம் கடைசித் தேதிக்குள் செலுத்தும்படி கோரப்படும் (டிமாண்டு பிறப்பிக்கப்படும்) கட்டணம் கேட்புக் கிடைக்கப்பெறவில்லை என்ற காரணத்தால் அதிகப்படி தண்ணீர் கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணம் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

(2) மேற்படி 9 உபவிதிகளின்படி செலுத்தப்பட வேண்டிய கட்டணம் மேற்சொன்ன கால அளவிற்குள் செலுத்தப்படவில்லையாயின் கட்டணக் கேட்பு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குப்பின் இணைப்பை எவ்வித முன்னறிவிப்பு இன்றி உடனடியாக துண்டித்துவிட ஆணையாளருக்கு உரிமையுண்டு. அவ்விதம் குழாய் இணைப்பினை துண்டிப்பதால் ஏற்படும் சேதத்திற்கு நகராட்சி மன்றமோ, ஆணையாளரோ பொறுப்பாளியல்ல.

(ஆ) இந்த உபவிதிகளில் சொல்லப்பட்ட நிபந்தனைகளின்படி தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதற்காக செலுத்த வேண்டிய கட்டணத்தை சம்பந்தப்பட்ட நபர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறினால் சொத்துவரியை வசூலிப்பதற்கு கையாளும் முறையில் வசூலிக்கத்தக்கதாகும்.

(இ) வீட்டிணைப்புக் குழாய் துண்டிக்க ரூ. 250.00 (ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்), மீண்டும் குழாய் இணைப்புக் கொடுப்பதற்கு ரூ. 250.00 (ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்) கட்டணம் செலுத்த வேண்டும்.

(ஈ) காலாண்டு காலத்திற்கு உட்பட்ட காலத்தில் தண்ணீர் பயன்படுத்தப்படாமலிருந்தால் அதற்கு யாதொரு வஜாவும் கொடுக்கப்படாமட்டாது. ஆனால் காலாண்டு காலத்திற்கு முற்றிலும் தான் தண்ணீர் பயன்படுத்தபேவதில்லை என்றும் எனவே தற்காலிகமாக இணைப்பைத் துண்டிக்கும்படியும் முன்னமே தெரிவித்தும் அவ்வாறு பயன்படுத்தப்படாமல் இருந்து பின் அக்காலத்திற்குப் பின் மீண்டும் இணைப்பைப் பெற்றால் ஆணையாளரால் வஜா கொடுக்கப்படும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு தடவைக்கும் தற்காலிக குழாய் இணைப்பை துண்டிக்க ரூ. 250.00, இணைப்பு வழங்க கட்டணம் ரூ. 250.00 (ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்) வசூலிக்கப்படும்.

குறிப்பு :— இவ்விதியில் கூறப்படும் காலாண்டு என்பது மூன்று காலாண்டர் மாதங்கள் ஆகும்.

10 (அ) அளவு மானியில் ஏற்படும் கோளாறுகள் அல்லது அளவுகள் சரியாக எடுக்கப்படாததாக கொடுக்கப்படும் புகார்கள் அவ்விதம் ஆட்சேபிக்கப்படும் அளவு குறித்த அளவுகளை எடுத்துக் கொண்ட நாள் முதல் ஒரு வாரத்திற்குள் அவ்விதம் பாதிக்கப்பட்டவர் எழுத்து மூலமாக ரூ. 250.00 முன் பணத்துடன் மனு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) மேற்படி காலவரைக்குள் வராததும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட முன் பணம் செலுத்தப்படாததுமான புகார் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டாது.

(இ) பரிசோதனைக்கு பிறகு அளவுமானி தவறுதலாக அளவு காட்டுகிறது என்றோ அல்லது கோளாறு உடையதென தெரிய வந்தாலோ மேற்படி முன்பணம் ரூ. 250.00 திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் அளவுமானியில் யாதொரு தவறும் இல்லையென்று கண்டால் தொகையை நகராட்சி கணக்கில் வரவு வைத்துக் கொள்ளப்படும். இரு தரப்பிலும் 5 சதவீதம் வரையுள்ள தவறுதல்கள் கவனிக்கப்படமாட்டாது.

**11.** அளவுமானி தொடர்ந்து ஒரு வாரத்திறகு மேலாக பழுதடைந்தாலும் தவறான அளவுகள் காட்டுவதாகவும் இருப்பதாகத் தெரிந்தால், சென்ற வருடத்தில் இதே மாதத்திலோ அல்லது மாதங்களிலோ பதிவு செய்யப்பட்ட அளவு அல்லது விவரங்கள் கிடைக்காமற்போனால் இதர எந்தப்புள்ளி விவரம் பொருத்தமானதாக ஆகுமென்று ஆணையாளர் கருதுகிறாரோ அந்த விவரத்தைக் கொண்டு

கணக்கிடப்பட்ட அளவு தண்ணீர்தான் உண்மையாக செலவிடப்பட்டதாகக் கொள்ளப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படும். இது விஷயத்தில் ஆணையாளர் முடிவே இறுதியானது.

12. நகராட்சி தண்ணீர் திட்டத்திலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்படும் தனிப்பட்ட நபருக்குப் பாத்தியமான கழிவறை, ஆணையாளர் கூறும் உயரம் பரிமாணம் உள்ள தொட்டிகள் அவர்கள் எவ்வடிவத்தில் இருக்க வேண்டும் எனக் கருதுகின்றாரோ அவ்வடிவத்தில் இருக்க வேண்டும்.

13. நீராவிக் கொப்பரைக்கு நகராட்சி தண்ணீர் குழாயிலிருந்து தண்ணீர் வழங்கத் தேவையாயிருந்தால் அது ஒரு தொட்டியிலிருந்துதான் வழங்கப்பட வேண்டும். அல்லது குழாய் இணைப்புக் கொடுத்துள்ள குழாயிலிருந்து நேராக நீராவித் தொட்டிக்கு வழங்கக்கூடாது. அவ்விதம் நீராவித் தொட்டிக்கு தண்ணீர் வழங்கும் தொட்டி ஒவ்வொன்றிலும் ஒரு பந்த வடிவ அடைப்பானுடன் எச்சரிக்கை குழாய் பொருத்தப்பட வேண்டும். இவைகளை பார்வையிட போதிய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

14. (அ) உபவிதி 12 அல்லது 13 இல் குறிப்பிட்டதைத் தவிர வேறு எந்த வீட்டு இணைப்பின் குழாயினை தொட்டி அல்லது நீர்த்தேக்கத்துடன் பொருத்தக்கூடாது. தொட்டி அல்லது தண்ணீர் குழாயிலிருந்து மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ தண்ணீர் எடுத்துச் செல்ல நீருந்து கருவி பொருத்தப்படாமாட்டாது.

(ஆ) ஒரு வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் நகராட்சியின் தண்ணீர்குழாயிலிருந்து ஹோஸ் என்னும் ரப்பர் குழாய் மூலமோ அல்லது வேறு சாதனம் பொருத்தியோ தண்ணீர் எடுத்துச் செல்லக்கூடாது.

15. வீட்டு இணைப்பின் குழாய்களையோ அல்லது உப கருவிகளையோ அவற்றின் நிலைமையைப் பரிசோதிக்கவோ அல்லது பழுது பார்க்கவோ அவைகளை நிர்வாக அலுவலர் எந்த நேரத்திலும் பார்க்கலாம். அவ்வாறு பரிசோதிக்கும் பொழுதோ அல்லது மற்ற சந்தர்ப்பத்திலோ குழாய்களோ அல்லது உப கருவிகளோ பழுதாய் இருந்தால் ஆணையாளர் அவ்வீட்டின் உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பவர்களுக்கோ அறிவிப்பு அனுப்புவார். அவ்விதம் அறிவிப்பு அனுப்பப்பட்ட15 தினங்களுக்குள் பழுது பார்க்க வேண்டும். அவ்விதம் அறிவிப்புக் கொடுக்கப்பட்ட 15 தினங்களுக்குள் பழுது பார்க்காவிட்டாலும் அல்லது பழுதினால் குடிநீரின் தூய்மை கெடக் கூடியதாக இருந்தாலும் ஆணையாளரே மேற்படி வேலையைச் செய்து செலவு தொகையை உரிமையாளரிடமோ அல்லது குடியிருப்பவர்களிடமோ வசூல் செய்யலாம் அல்லது இணைப்பை (கனெக்ஷன்) துண்டித்து விநியோகம் செய்வதை நிறுத்தலாம். மேலும் பரிசோதனையின்போது அனுமதியில்லாமல் குழாய் போடப்பட்டிருப்பதாகவோ அல்லது மாற்றப்பட்டிருப்பதாகவோ கண்டுபிடிக்கப்பட்டால் குடியிருப்பவர்களுக்கோ அல்லது உரிமையாளருக்கோ 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்து குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

16. நகராட்சியிலிருந்து தன் வீட்டிற்கு குழாய் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தால் அல்லது கொடுத்தால் ஒவ்வொருவரும் அந்த இணைப்பை நல்ல முறையில் தன் சொந்த செலவில் பழுது பார்த்து பராமரித்து வர வேண்டும்.

17. ஆணையாளரின் தெளிவான உத்தரவு இல்லாமல் வீட்டுக் காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட இணைப்புகளிலிருந்து தண்ணீர் இதர காரியங்களுக்கு உபயோகப்படுத்துக்கூடாது.

18. தீப்பிடித்த நேரங்களில் தவிர மற்ற காலங்களில் ஆணையாளரால் அதிகாரம் அளிக்கப்படாத யாதொரு நபரும் (மெயின் குழாய்) பிரதான குழாய், பகிர்மானக் குழாய், மதகுகள் அல்லது தீயணைக்கும் பொத்தான் ஆகிய எந்த சாதனத்தையும் திறக்கவோ அல்லது அவற்றில் எவ்விதத்திலும் இடையூறு செய்யவோ கூடாது.

19. கல்யாணம் அல்லது மற்ற விஷே காலங்களில் ஆணையாளரால் கட்டிடங்களுக்கு தற்காலிக குழாய் இணைப்பு கொடுப்பதற்கு ரூ. 250.00 வீதம், இணைப்பை துண்டிக்க கட்டணம் ரூ. 250.00, அதனுடன் நாள் ஒன்றுக்கும் அதற்கு குறைவான கால அளவிற்கும் குடிநீர் கட்டணம் ரூ. 250.00 வசூலிக்கப்படும். மேலும் தற்காலிக குழாய் இணைப்பு கொடுக்க 15 மி.மீ. திருகு குழாயும் இறுதிப்பாகத்தில் 5 மி.மீ. விட்டமுள்ள குழாய் மூன்று மீட்டர் நீளமுள்ள குழாயும், குழாய் இணைப்பு கொடுக்க தேவையான சாமான்களும், கூலி ஆட்களுக்கும் ஆகும் செலவுத் தொகை மேற்படி மனுதாரரே கொடுக்க வேண்டும்.

20. வீட்டுகாரியத்திற்கு அல்லது வேறு காரியத்திற்கு விநியோகிக்கப்படும் தண்ணீர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக நகராட்சி மன்றத்துக்கு தெரிய வந்தாலும் அல்லது தண்ணீர் உற்பத்தியாகும் தலைமைப்பீடத்தில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதாக தான் கருதுமேயானால் 24 மணி நேர அறிவிப்பு கொடுத்த பின்பு குழாய் இணைப்பினைத் துண்டிக்க நகராட்சிக்கு உரிமையுண்டு. இச்சந்தர்ப்பத்தில் ஏற்படும் நஷ்டத்திற்கு நகராட்சி மன்றம் பொறுப்பாக மாட்டாது.

21. (அ) யாதொரு நபரும் அளவுமானியில் உள்ள முத்திரைய அல்லது பூட்டை அல்லது அளவுக்கருவியைத் திறக்கவோ அல்லது அதில் காட்டும் அளவை திருத்தி மாற்றவோ அல்லது விநியோகமான தண்ணீர் எவ்வளவு என்ற மேற்படி அளவுக்கருவி பதிவு செய்வதை வேறு எவ்விதத்திலும் தடுக்கவோ கூடாது.

(ஆ) தண்ணீர் அளப்பதற்காக அளவுக் கருவி (மீட்டர்) வைப்பதற்கு முன் தண்ணீரை எடுக்கவோ அல்லது உபயோகப்படுத்தவோ கூடாது.

(இ) அளவுமானியை (மீட்டர்) திருடிக்கொண்டு போகவோ அனுமதிக்கவோ அல்லது சப்ளை செய்யப்பட்ட தண்ணீரின் அளவைக் காட்டா வண்ணம் அதை சேதப்படுத்தவோ கூடாது.

22. (அ) இந்த உபவிதிகள் அமுலுக்கு வருவதற்கு முன்பு கொடுக்கப்பட்ட எல்லா வீட்டு குழாய் இணைப்புகளும் இந்த உபவிதிகளின்படி கொடுக்கப்பட்டதாக அங்கீகரிக்கப்படும். இந்த உபவிதிகளின்படி தண்ணீர் விநியோகத்திற்கான செவினங்களையும் மேற்படி இணைப்புகளை (கனெக்ஷன்) இத்துணை விதிகளுக்குத்தக்கவாறு திருத்தியமைப்பதற்கான எல்லா செலவுகளையும் கட்டிட உரிமையாளரோ அல்லது குடியிருப்பவரோ ஏற்க வேண்டும்.

(ஆ) இந்த உபவிதிகள் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து இதுவரை நடைமுறையில் இருந்த உபவிதிகள் செல்லுபடியாகாது.

(இ) மேற்படி வீட்டுக்குழாய் இணைப்பின் முழுவதுமோ அல்லது அதன் பாகத்தையோ இந்த உபவிதிகளின்படி மாற்றியமைக்கும்படி ஆணையாளர் கட்டளை இடலாம்.

23. அரசாங்கத்திற்குச் சொந்தமானதோ அல்லது அரசின் கண்காணிப்பிலோ அல்லது அவர்கள் பராமரிப்பில் உள்ளதுமான ஸ்தாபனங்களுக்கு அவற்றின் தன்மையைப் பொறுத்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் முடிவு செய்து குறிப்பிடப்படும் கட்டிடங்களுக்கு மட்டும் இந்த உபவிதிகள் பொருந்தும்.

24. (அ) இந்த உபவிதிகளில் எதையாவது மீறி நடப்பவர்கள் யாராக இருந்தாலும் அல்லது ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையினுடைய பொறுப்பையும், பராமரிப்பையும் கொண்ட யாரேனும் அக்குழந்தைகள் மேலே கண்ட உபவிதிகளில் எதையாவது மீறி நடப்பதை தடுக்கத் தவறினாலும் அடியிற்கண்ட தண்டனைக்கு உள்ளாவார்கள்.

(ஆ). ரூ. 250.00 (ரூபாய் இருநூற்றி ஐம்பது மட்டும்) வரை அபராதமும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் மீறி நடக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூ. 50.00 (ரூபாய் ஐம்பது

மட்டும்) வரையிலும் அபராதமும் விதிக்கப்படும். அல்லது அதே குற்றம் தொடர்ந்து இழைக்கப்படுமானால் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## துணை விதிகள்
## பாகம் – 2
## பொதுக்குழாய்

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 306 ஆவது பிரிவின்படி பொதுத் தண்ணீர் குழாய்கள் உபயோகிப்பதை மற்றும் பொதுக் குழாய்களையும் தண்ணீர் விநியோகத்தை திட்டத்தையும் பராமரிப்பது பற்றியும் தண்ணீரை வீணாக்குவதையும் தவறான வழிகளில் உபயோகிப்பதையும் தடுப்பது பற்றியும் தயாரிக்கப்பட்ட உப விதிகள்.

1. எவரும் பொதுக் குழாய் இணைப்புகளிலிருந்து அல்லது தீயணைப்பிற்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளிலிருந்து வேண்டுமென்றோ அல்லது அஜாக்கிரதையாகவோ தண்ணீரை வீணாக செலவழிக்கக்கூடாது.

2. (அ) எவரும் பொதுக் குழாயிலிருந்து 30 லிட்டர் அளவுக்கு மேற்படாத பாத்திரங்கள் தவிர, வேறு பாத்திரங்களில் தண்ணீர் பிடிக்கக் கூடாது.

(ஆ) வீட்டு உபயோகமில்லாத வேறு உபயோகங்களுக்கு பொது குழாயிலிருந்து தண்ணீர் பிடிக்கக்கூடாது.

(இ) பொதுக் குழாய்களிலோ அல்லது கால்நடைக்கென அமைக்கப்பட்டிருக்கும் தொட்டிகளிலோ துணிமணிகள் துவைக்கவோ அல்லது குளிக்கவோ, பாத்திரங்கள், வண்டி வாகனங்கள், மிருகங்கள் ஆகியவைகளை கழுவுவதோ கூடாது.

(ஈ) மற்றவர்கள் தண்ணீர் பிடிப்பதற்கென காத்திருக்கும்பொழுது தொடர்ந்து ஒரு தடவைக்கு மேல் தண்ணீர் பிடிக்கக்கூடாது.

3. தீ விபத்துக் காலங்களில் நெருப்பணைக்கும் காரியத்திற்கல்லாது வேறு எந்தவித காரியத்திற்கும் கால் நடைகளுக்கென குடிதண்ணீர் நிரப்பப்பட்டு உள்ள தொட்டி அல்லது தீயணைக்கும் பொத்தான் மற்றும் இதர அடைப்பான்கள் இவற்றுள் யாதொரு நபரும் கையாளுவதோ அல்லது தண்ணீர் எடுக்கவோ கூடாது.

4. தீ விபத்தின்போது தீ அணைப்பதற்கன்றி மற்றபடி எவரும் பொதுக் குழாயிலிருந்தோ, தீயணைப்புக் குழாயிலிருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக் கூடாது. தீயணைப்புக்கின்றி பிற பயன்களுக்காக குடிநீர் ஒருவரால் தொடர்ந்து எடுக்கப்படுவது தெரியவந்தால் அவர் துணை விதிகளை மீறுவதாய் கருதப்படுவதுடன் நகராட்சிகளின் சட்ட விதிகளின்படி அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அருவருக்கத்தக்க அல்லது பரவுவதற்குத்தக்க வியாதிகளால் பிடிக்கப்பட்ட யாதொரு நபரும் பொதுக் குழாய் கால்நடைத்தண்ணீர் தொட்டி மற்றும் தீயணைக்கத் திறக்கும் அடைப்பானை பயன்படுத்தக்கூடாது.

6. அருவருக்கத்தக்க அல்லது பரவுவதற்கு எளிதாக வியாதிகளால் பாதிக்கப்பட்ட பிராணிகளோ அல்லது மேற்கூறிய வியாதிகளுக்கு சம்மந்தப்பட்டதாகவோ அல்லது சம்பந்தப்பட்டுள்ளது என தனக்குத் தெரிந்தாலோ அல்லது அவ்விதம் சம்மந்தப்பட்டுள்ளது என்று தனக்குத் தெரியக் காரணமானதுமான எந்தப் பொருளையுமோ பொது தண்ணீர் குழாய் அல்லது கால்நடைத் தண்ணீர் தொட்டி அல்லது தீயணைக்க திறக்கும் அடைப்பான ஆகியவற்றின் அருகில் கொண்டு வரக்கூடாது.

7. யாதொரு நபரும் பொதுக் குழாய் அல்லது கால்நடை தண்ணீர் தொட்டி அவற்றிலோ அல்லது அவற்றைச் சுற்றிலுமோ எந்த அசுத்தமும் செய்யக்கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

8. தீ விபத்துக் காலத்தைத் தவிர மற்ற எந்த நேரத்திலும் ஆணையாளர் இதற்கென வழங்கப்பட்ட அதிகாரம் பெற்றவரல்லாதவர் எவரும் நீர்நிலைத் தேக்கம் பிரதான குழாய் (மெயின்) அல்லது பகிர்மான சிறு குழாய் அல்லது தண்ணீரை மூடி திறக்கும் அடைப்பான் அல்லது நெருப்பணைக்கும் பொத்தான் ஆகியவற்றையோ அல்லது மற்ற எந்த பொத்தானையோ அல்லது உபகரணத்தையோ திறக்கவோ அல்லது வேறு எந்தவிதமாவது அவற்றால் இடையூறு செய்யவோ அல்லது நகராட்சி தண்ணீர் விநியோகத் திட்டத்தைச் சேர்ந்த எந்த தண்ணீர் பொதுக் குழாய்கோ அல்லது தீயணைக்கும் பொத்தான்களுக்காவது எவ்வித சேதமும் விளைவிக்கக்கூடாது.

**<u>தண்டனை</u>**

எவரேனும் மேற்கூறிய உபவிதிகளில் எந்த உபவிதிகளை மீறி நடந்தாலும் அல்லது 7 வயதிற்குட்பட்ட குழந்தைகளை மேற்பார்த்தோ அல்லது பராமரித்தோ வரும் யாதொரு நபரும் மேற்படி குழந்தைகள் மேற்கூறிய உபவிதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும் 1920 ஆம் வருடம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 306 பிரிவின்படி ரூ. 50.00 (ரூபாய் ஐம்பது மட்டும்) அபராதம் விதிக்கப்படுவார்.

தொடர்ச்சியாக செய்யும் குற்றத்தில் முதல் முறையாக ஒருமுறை தண்டிக்கப்பட்ட பின் குற்றம் தொடர்ச்சியாக உள்ள காலத்தில் மீறப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நபரும் ரூ. 15.00 வரை அபராதம் விதித்துத் தண்டிக்கத்தக்கவர் ஆவார்.

**இ. ஷாஜஹான்,**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**

**வெள்ளகோவில்**
**நாள். 06.03.2017**

## <u>வெள்ளகோவில் நகராட்சி</u>
## <u>புதிய குடிநீர் இணைப்புக்கான விண்ணப்பம்</u>

படிவம் – அ
விலை ரூ. 10 /–

**தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிளம்பர் பெயர்**

1. விண்ணப்பம் வழங்கிய நாள் :
2. விண்ணப்பத்தாரரின் பெயர் மற்றும் விலாசம் :
3. தபால்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**நகர அமைப்பு பிரிவிலிருந்து கோரப்பட வேண்டிய விபரங்கள்**

1. கட்டிட வரைபடம் அங்கீகாரம் பெற்ற விபரம் :
2. மாறுதல்கள் இருப்பின் அதற்கான விபரம் :
3. இன்ஸ்ட்லேஷன் லைசன்ஸ் எண் (தொழிற்சாலையாக இருந்தால்) :
4. கட்டிடத்தின் வயது :
5. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு / மனைக்கு வளர்ச்சிப் பணிக்கான தொகை செலுத்தப்பட்ட விபரம் :
6. மேல்முறையீடு விண்ணப்பம் பெற்ற விபரம் :
7. தற்காலிக இணைப்பிற்கு பரிந்துரை செய்யப்படின் அதற்கான காலவரையறை :

**வருவாய்ப் பிரிவிலிருந்து கோரப்பட வேண்டிய விபரங்கள்**

1. வரி விதிப்பு எண் :
2. வருடாந்திர வாடகை மதிப்பு :
3. வரி :
4. உரிமையாளரின் பெயர் :
5. பிரிவு எண் :
6. கதவு எண் :
7. செலுத்த வேண்டிய வரி விபரம் :

**வரித்தண்டலர்** **வரி ஆய்வாளர்** **வருவாய் ஆய்வாளர்**

<u>வெள்ளகோவில் நகராட்சி கருவூலம்</u>

ரூ. -------------------------------------------- பெறப்பட்டது.
செலான் எண். ---------------------------------------------
நாள். ---------------------------------------------------

---

**படிவ எண் :** **வி.வ.எண் :**

### ஒப்புகைச் சீட்டு

புதிய குடிநீர் இணைப்பு சம்மந்தமாக தங்களது தேதிய விண்ணப்பம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கு ஒப்புகை அளிக்கப்படுகிறது. இது குறித்து அலுவலக நடவடிக்கைக்கு தேவையான விபரங்கள் கோரப்படின் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதற்கான உத்தரவு வழங்கப்படும் நாள். …………………….

**ஆணையாளருக்காக**
வெள்ளகோவில் நகராட்சி

## படிவம் ‘அ’
## தண்ணீர் விநியோகம் கோரும் விண்ணப்பம்

**அனுப்புநர் :**

**பெறுநர் :**

**ஆணையாளர்,**
**வெள்ளகோவில் நகராட்சி,**
**வெள்ளகோவில்,**
**திருப்பூர் மாவட்டம்.**

**அய்யா**

கீழ்க்கண்ட கட்டிடத்தின் சொந்தக்காரர் / குடியிருப்பவர் ஆகிய நான் தெருவில் …………………………………………… உள்ள கதவிலக்கம் எண் …………………… உள்ள வீட்டிற்கு வீட்டு / வணிக / தொழில் உபயோகத்திற்காக குடிநீர் வசதி செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு உபயோகத்திற்கும், வீட்டு உபயோகமில்லாத மற்ற பிற காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய தண்ணீர் மொத்த அளவு நாளொன்றுக்கு சுமார் ……………………………….. லிட்டர் வரை இருக்கும். வீட்டு உபயோகத்திற்கு எடுக்கப்படும் நீரில் வீட்டு உபயோகமில்லாத வேறு காரியங்களுக்கு பயன்படுத்தினால் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தைச் செலுத்த சம்மதிக்கிறேன். மேலும் நிர்வாகத்தினரால் அளவு மானிக்காக நிர்ணயம் செய்யப்படும் அளவுமானிக் கட்டணம் / பராமரிப்புக் கட்டணம் செலுத்தவும் உறுதி கூறுகின்றேன். இவ்வாறாக செய்து தரப்படும் குடிநீர் வசதிக்கான ஒப்பந்தத்தை நான் ரத்து செய்ய விரும்பும் பட்சத்தில் நிர்வாகத்தினருக்கு ஒரு மாதம் முன்னதாகவே எழுத்து மூலம் அறிக்கை கொடுக்க உறுதி கூறுகின்றேன்.

மனையின் வரைபடமும் கட்டிடத்தின் மதிப்பீடும், அதில் தண்ணீர் குழாய் வைக்கப்படும் இடத்தையும் குறிக்கப்பட்டு இத்துடன் தங்களின் ஒப்புதலுக்காக அனுப்புகிறேன்.

**இடம் :**
**நாள்**

**வீட்டு சொந்தக்காரர் / குடியிருப்பவர் கையொப்பம்**

குறிப்பு : வரைபடம் தெளிவாகவும் 1:50 என்ற திட்டத்தின்படியும் வரையப்பட வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் கையொப்பம் இடப்பட வேண்டும்.